# ஆதி மார்க்க னீதி மொழி

**November 2025**

***இதழ் 52 – நவம்பர் மாதம் 2025 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



## மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்கோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்களுக்கே னமஸ்காரம்.

## மகாசங்கல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் கோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்திருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்காலங்களாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே !

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் 52ஆவது இதழாக ஆதி மார்க்க நீதி மொழி மின்னணு சஞ்சிகை மலர்கிறது. மண்மதியாம் புரட்டாசி மாதம் காணொளி காட்சியாக நடைபெற்ற ஆதி மார்க்க நீதி அவையின் 11 அவை, மற்றும் இசை வகுப்பு இரண்டின் நிகழ்வுடன் தொகுக்கப் பெற்ற இம்மின்னணு சஞ்சிகையானது மலர்ந்து அறிவு மணம் கமழ உங்கள் கைளில் தவழ்கின்றது.

மாக்களாக இருந்தோரை மக்களாக்கி மேலும் தேவர்களாக மாற்றக் கூடிய அரும் பெரும் செயல்கள் அடங்கியதே இம் மின்னணு சஞ்சிகை. இது வெறும் வார்த்தைகள் அடங்கிய பிரசங்கம் அல்லது விளம்பரம் என்ற சொல்லுக்கு எல்லாம் அப்பாற்பட்ட மிகவும் அரிதான உன்னதமான ஒன்றாக, உயிர் காக்கும் ரகசியங்கள் கொண்ட பொக்கிஷம் என்பதே உண்மை. இதைப் பார்த்துப் படிக்கும் மக்கள் இதற்கான செயல் எங்கே எனத் தேடி அலைந்து பெற்றாலும், பெற்ற பொருள் இன்னதுதான் என உணர்ந்து பயனும் பலனும் பெற்று உய்ய வேண்டும். அதற்காகவே பாரப் பெரிய பரோபகார நோக்குடன் மலர்கிறது இந்த சஞ்சிகை.

எதார்த்த நன்மனம் கொண்ட மக்கள் யாவரும் பலன் பெற வேண்டியே ஆண்டும் மாதமும் பல கடந்து அயர்வின்றி இந்த சஞ்சிகை உங்கள் முன்பாக முழங்குகிறது. இதனுள் சர்வ சாதாரணமாக பல தேவ ரகசியங்கள் எளிதாக விளங்கும் வண்ணம் செயலுடன் ஆக்கப் பெற்றுள்ளது. மக்கள் யாவரும் உயிருக்கான அறிவுக்கான நிலைகள் யாவும் அறிந்து வாழ வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கம் கொண்டே இந்த சஞ்சிகை வாடா மலராக மலர்ந்து கொண்டே இருக்கிறது.

இதனைப் பார்த்து படித்து தேடி அடைந்து பலன் பெறும் எதார்த்த நன்மனத்தினர் யாவரும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திரு நாமத்தையும் திருப்புகழையும் ஓங்கி உரத்த குரலில் அறிக்கை செய்வதற்கான அறிவும் அருகதையும் தகுதியும் சக்தியும் பெற வேண்டி சர்வ வல்லமை பொருந்திய சர்வேஸ்வரனின் திருவடி போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க நீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*பாவம் என்பது உன் மூச்சு துண்டாடப்பட்டு னஷ்ட மடைவது; அப்படி ஆகாமல் இருப்பதுவே புண்ணியம். புண்ணியத்திற்கு ஒரு உரு இருக்கிறது. அது உன் ஆசான்தான். அவர்களையே னம்பு. அவர்களைத்தவிர வேறொன்றை னேசிக்காதே. அவர்கள் சொற்படி னட. அப்ப உன் மூச்சு வீணாகாது.*

*மோனம் என்பது உன் சுவாசம் ஓடாது னிற்கும் னிலை. அதுதான் ராசி னிலை. ஏகராசிக் குவியல் னிலை என்பதும் அதுவாகும்.*

*செத்த பிணத்திற்கு ஒருவர் உயிர் கொடுக்கிறேன் என்று வந்நால், அவர் வார்த்தைகளைக் கேட்டு ஒருவர் எந்ந ஆர்வத்தோடு னடப்பாரோ அந்ந ஆர்வத்தோடு, எம் வார்த்தைகளைக் கேட்டு உன் உள்ளத்தில் வைத்து னடக்க வேண்டும். அதுவே உன் மீட்புக்கு வழி.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 அக்டோபர் மாதம் அவை நிகழ்வுகள் – 2025 நவம்பர் மாதம் வெளியீடு

## 04-10-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

**ஆதியே அந்தமே அருமையான அருட்கடலே...** என்ற சிவானந்த போதம் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் குமார்:* மெய்க் கல்வியாம் அறிவை ஓர் மெய்க் குருவின் அருளால் தான் கற்க முடியும். நம் எண்ணத்தை நன்மையாக மாற்றி காலன் கையில் சிக்காமல் பிறவாமையில் ஆக்கி வைக்கும் குருவின் நாதமே சுயம்புவாக வரும் நிறைமொழி. பிறவிப் பிணித் தாகம் தீர்க்கும் தடாகமே ஆதி மார்க்க னீதி அவை.

**கோடாயிதக்கூர் – வாக்கியம் 221:** ஐயறிவு பேதங்கள் செத்தால் இல்லாத தீட்டும் திவசமும் ஆறறிவு பெற்ற மனிதன் இறந்த பின் இருப்பது ஏனெனில் அவன் கற்பகோடி கால அவஸ்தையில் வேறு ரூபத்தில் இருப்பதால்தான். அற்ப ஆயுள் கொண்ட மனிதன் ஆடு மாடு போல் வாழ்ந்து நரக அவஸ்தைக்கு போகக்கூடாது என்பதற்கே எனது நெடிய பாடு என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் கௌதம்:* மானிட ஜென்மம் எடுத்தவனுக்கே திதி என்பது உண்டு. குருவருளால் ஒருவன், தான் ஒவ்வொரு கணமும் இறப்பதை அறிந்து அதிலிருந்து மீளச் செய்வதே சாகாக்கல்வி.

*ஜீவசகோதரர் குமார்:* **வேதாகமப் பகிர்தல்: மத்தேயு அதிகாரம்-12, வாக்கியம் 45 ; யோவான் அதிகாரம் – 9, வாக்கியம் 2,3 ; பீட்டர் அதிகாரம் - வாக்கியம் 1:** பிறவிப் பிணி தீர்க்கும் சர்வ ரோக நிவாரணியே குருவின் வாய்மை. அவரே நம் பிறவிக்கடல் கடத்தும் பருமரக்கலன். பிறவாமை ஒன்றே இறைவனிடம் வேண்டுதல் வேண்டும். தன்னறிவில் சாயும் அவரவரின் வினைப் படியே பிறப்பு உண்டாகிறது.

**குருபிரான் அருளமுதம்:** மனமே செய்வினை செய்யும் திமிர் அரா இருளன் பவ மூகையன். குருவானவர் தங்களது திருஷ்டி கொண்டு அவனை விலக்குவதே கண்ணேறு. மனம் அறிவாக மாறும் செயலை உணர்த்தும் தலமே அலுமேலு மங்கா உடனுறை பிரசன்ன வெங்கடேச பெருமாள் இருக்கும் திருமலை வையாவூர். நாளும் கோளும் ஒன்றாக இருக்கும் போதே பிறப்பு சரியாக அமையும். பிறரையும் தன் போல் எண்ணும் குணம் உள்ளவனே ஜீவ தரிசனம் பெற்றவன்.

*ஜீவசகோதரி ஜீவிதா:* **குருவின் அவதார மகிமை -** ஜானகி, பெருமாளின், அஷ்ட கனிஷ்ட புத்திரனாம் பால கிருஷ்ணன், கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ணமே! புரட்டாசியில் பிறந்த பூரட்டாதி நட்சத்திர நாயகனாம் லக்னமோ மிதுனமாம், ராசியோ மீனமாம். மெய்வழி குழந்தைசாமி கவுண்டரே தேர்ந்தெடுத்த சீடராம், குரு குல வாசமோ வருடம் ஓர் 29ஆம். இல்லற தர்மத்துடன் வேல் தாங்கி வந்திரங்கி, திருக்கரத்தில் வாளுடனே கிரகஸ்தன் ஆனவராம்! சன்யாசம் பூண்டுமே சற்குருவின் வடிவாகி சகலமும் தானென்று தனி ஒருவராய் நின்றவராம்! பிரம்மத்தின் மீதேறி பிரம்மச்சாரி ஆகியே நித்திய பத்தியம் கொண்டு நிமலனும் ஆனவராம்! வானப் பிரஸ்தனாகி வாலைத் தாயும், தந்தையுமாய் குருவாகி தெய்வமாய் குவலயத்தில் வந்தவராம்! துறவறம் பூண்டுமே தூய மதியுடனே தூய் மார்க்க வழிதனிலே தூல உணர்வும் விட்டவராம்! அறமுடனே அவதாரம் பூண்டு உயிர்த் தமிழின் இசையுடன் உலகம் உய்யச் செய்பவராம்! சமத்துவமாம் சன் மார்க்க வழியுடனே சரவண நந்தவன நாயகனின் நாமமே பால கிருஷ்ண கிருஷ்ணமே! கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ணமே! சர்வம் கிருஷ்ணார்ப்பணம்!!!

**குருபிரான் அருளமுதம்:** காலகால காலங் கடந்த காரிருள் காருண்யமே கிருஷ்ணம்.
பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 05-10-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சென்னை
## குருபிரான் அவதாரத் திருநாள் சிறப்பு அவை
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

**இன்ப வடிவம் தருவதற்கு இறைவன் வருகின்றார்...** எனும் அருட்பா ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

வேதமே முடிவற்ற ஆரண மாலையான பூரணமாகும். ஒருருளை தேவ ரதத்தை நடத்த, பரிசாக வரும் எதார்த்த தேவ குருவே நரனை மனுவாக்கி தேவர் ஆக்குகிறார். வேத சாட்சியாக வாழும் வாழ்வே மெய்ஞ்ஞான வாழ்வாகும். பெரிய திருவடியான கருடாழ்வார் அமானிதமாக, சிறிய திருவடியான ஆஞ்சநேயர் சூக்குமமாக, அகத்தில் விளங்கும் செயலை ஆசான் அருள் கொண்டே அறிய முடியும்.




*ஜீவசகோதரர் சங்கர்:* யுகங்கள் நான்கும் அவரவரின் தேக ரகசியமாக இருப்பதை அகர பொருளைத் தாங்கி வரும் அவதார புருஷரே அறியச் செய்கிறார். ஆர்வ சித்தம் உள்ளவரே மெய்யை மெய்யாகப் பெறுகின்றனர்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* குருவின் அருளால் மெய்ஞ் ஞானத்தை அறிந்து ஆதியை உணர்ந்த மக்களே அறுவகை சமயத்தின் வழிபாட்டு ரகசியத்தை அகமியத்தில் அறிவர். சன்மார்க்க மரபான சாகாக் கல்வி, மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்றவர்களே ஆதி மார்க்க நீதி அவை மக்கள்.

*ஜீவசகோதரர் குமார்:* குருவின் அருளால் மக்கள் ஆனவர்களே மரணமிலாப் பெருவாழ்வு பெறுகின்றனர். பிறந்தது இனி இறவாத பேசும் பஞ்சாட்சரம் தாங்கி வரும் பிறவா முதல்வனே பிறவா நெறியை அருள்கிறார்.

**குருபிரான் அருளமுதம்:**

நினைவு பிறக்கும் ராஜ அங்கத்தில் ஆகிக் கொண்டவரே குருவின் அங்கத்தில் ஒருவர். அவர்களே அங்கத்தில் உஜூது நடையை அறிந்து மூல மந்திரத்தை செயலாகப் பெற்றவர்கள். சமத்துவத்தின் உயிரொட்டிய அகமிய ரகசியத்தை அறிந்த மக்களே ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

*என்னுடைய இந்த சத்திய ஸ்வரூபமான வார்த்தை பொய்யாகாது. இப் பூமியின் மீது குருகீதைக்குச் சமமான ஸ்தோத்திரம் இல்லவே இல்லை.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 09-10-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பரிசு குருவே மறையின் தரிசனை பண்ணுருவே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் – வாக்கியம் 8 : குருபிரான் அருளமுதம் :**
குருபெருமான் தங்களின் பெருங்கருணையால் காலன் நம்மை ஒன்றும் செய்யாமல் இருப்பதற்காக செய்த உதவியே செய்யாமல் செய்த உதவியாகும். அதற்கு ஈடு இணையாகாத ஒன்றே வையகமும் வானகமும். பரம குருவின் பாத தாமரையில் சரணாகதி அடைந்த மக்களே சிவ தர்மப் பெருவெளியில் இரண்டறக் கலந்து நித்திய முத்தி தேகம் அடைகின்றனர்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம் :**
மனுத்தலைக்குள் மறைபொருளாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் மாமணி ஜோதியெனும் சுத்தத் திருவடியை தரிசிக்கும் உபாயத்தை அருள்வதே அறிவு அறி பாடம். உயிரெழுத்து பனிரெண்டுடன் ஃ எனும் ஆய்த எழுத்தும் சேர்ந்து 13 நிலைகளாக அகர வரிசைப்படி இப்பாடல் அமைக்கப் பெற்றதின் அகமிய இரகசியத்தை அருள்பவரே அருட் பதி. அப் பதியின் அருள் பெற்ற மக்களே அறியாமை எனும் இருள் நீங்கி, நீதி நெறியில் நடந்து ஆதியாகிய ஜோதியை தரிசிக்கின்றனர். பெரியோராக வரும் பிரம்மபீடம் இரக்கத்துடன் நம்மை ஆட்கொண்டு இருதயம் விளங்கச் செய்த பிறகே ஈகையும் இரக்கமும் பிறக்கின்ற அறிவிருக்கும் தலத்தில் குடியேறி குன்றாத பெருவாழ்வு வாழ முடியும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது .

## 11-10-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் பொற்பாதம் போற்றி **துலங்ங இங்ஙு எவர்க்கு மெட்டா னிலைக ளெல்லாம்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
பட்டினத்தார் தனது குருநாதர் அறிவு எனும் சஞ்சீவியை உபதேசமாக வழங்கியதை **வெட்டாத சக்கரம் ... கருத்தினுள்ளே முட்டாத பூசை அன்றோ குருநாதன் மொழிந்ததுவே** என அருளியுள்ளார். குருவின் அன்பு ஒன்றே நம்மை சிவமாக்கும். குருவருளால் நம் நாமத்தின் பொருளை கற்றுத் தேர்வதே தலையாய கடமையாகும்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் - 222 : குருபிரான் அருளமுதம் :**
மெய்ப் பொருள் எனும் அழியாத செல்வமே மாடு என்பதாகும். ஆசான் அருளும் செவிச் செல்வத்தின் மூலமே நமது சுயம்பிரகாச பொருளை தரிசித்து நித்திய பேரின்ப வாழ்வில் குடியேற முடியும்.

*ஜீவசகோதரர் கௌதம்:* மின்னல் கிரணமாகிய ஜீவ தேகத்துள் னாள் தோறும் னுழைந்து பழகும் சன்மார்க்கச் செயலை கற்றுத் தருபவரே சன்மார்க்கர். அணுவுக்கு அணுவாக அண்ட பிரம்மாண்டமாக விளங்கும் இறை பொருளை அறியும் சக்தி மனு ஒருவனுக்கே உண்டு.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம் : மத்தேயு அதிகாரம் 18 - வாக்கியம்-3,4:**
அந்தகரண கூட்டத்தை அறிவாக மாற்றியே பரலோக ராஜ்யம் அடைய முடியும். ஜீவ பண்டிதரின் அருளால் காண்பதே ஜீவதரிசனை. சர்வ சக்தியுடன் புறத்தில் அலையும் மனதை அகம் திருப்பி அறிவாக மாற்றி புலன்களை வெல்லும் செயலே விதியை மதியால் வெல்வதாகும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் சங்கர்:* ஆசான் அருளால் பழகித் தேர்வதே அக உலக வாழ்விற்கான மெய்க்கல்வி. சர்வத்தையும் தாங்கி நிற்கும் ஆகாயம் போல் நம்மை தாங்கி நிற்கும் ஆகாயமாகிய எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும், நன்மையே செய்தால் நற்கதி பெறலாம்.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 12-10-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தந்நருள வேண்டுமென்ற மைந்நர் தம்மை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் திருமுருகன்:*
மாறாது இருக்கும் பிரம்மத்தை விதியை மதியால் வென்ற ஆசான் அருளால் அறிந்து வினை தீர்க்கும் நான்கு படிநிலைகள் கடந்து வாழும் காலத்தில் பிறவாமை பெறுவதே ஞானம்.

*ஜீவசகோதரர் கிரிதரன்:*
குருவின் அருளால் அகவுலக வாழ்வில் அறிவுத் துலக்கம் பெற செய்யும் செயலே கடமையாகும். நித்திய வாழ்விற்காக பாடுபடுவதே பிறப்பின் நோக்கம். அதற்காக இஸ்லாம் கூறும் ஈமான் கோட்டையில் ஒன்றே ஐந்து கடமைகளாகும்.

*ஜீவசகோதரர் பாண்டி - ஆவடி:*
மனித தேகமே ஆலயம். ஆலயம் புகும் ஆன்மாவை நோக்கிய பயணமே அழிவில்லா வாழ்வு. அகமிய செயலை விளக்குவதே ஆகமம் ஆகும். நமது உள்ளக் கோவிலில் விளக்கேற்றும் ஆசானே அருட்பெருஞ்ஜோதி.

*ஜீவசகோதரி பவித்ரா ஜெய்குமார்:*
அறிவெனும் நாதமே வேதம். நான்கு தேக ரகசியங்களை குரு அருளால் கற்றுத் தேர்வதே நான் மறையாகும். மாயை விலகி உண்டாகும் ஆன்மப் பிரகாசமே மனிதனை பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஒளியாகும்.

*ஜீவசகோதரர் கார்த்திகேயன்:*
மனிதனை நன்னெறியில் வாழச் செய்யவும் தேவ நிலைக்கு உயர்த்தவும் மனதை பழக்கவும் உண்டானதே மெய்க்கல்வி எனும் சாகாக் கல்வி.

*ஜீவசகோதரர் அஜய்கிருஷ்ணன்:*
அறிவாகிய குருவின் மூலம் தெளிவு பெறும் சீடனே மனம். சத்திய வேதம் கூறும், கேட்பதும் தட்டுவதும் தேடுவதும் எங்கே? யாரிடம் ? எதை? என ஆசான் அருளால் அறிந்தால் தான் அகவுலகம் விடியும்.

*ஜீவசகோதரர் ஜெய்குமார்:*
எண்கள் புற வாழ்விலும் ஆன்மீக வாழ்விலும் மிக அவசியமான ஒன்றாகும். எண் ஆகிய அகரப் பொருளை அறியும் போதே 96 தத்துவங்களால் ஆன மனிதன் தன்னை அறிய முடியும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 16-10-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஶ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **முடியாகிய மூமீனென வுளனாள்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
வாழும் காலத்தில் அடக்கம் மடக்கிப் பிடிக்கப் பழகித் தேர்ந்தவர்களே பழியாகிய எமபயத்தை கடந்து வாழ்வர்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் – வாக்கியம் 9 : குருபிரான் அருளமுதம் :**
தன்னை அறிந்த ஒருவனே திருக்குரானின் ஞான விளக்கத்தை அறிய முடியும். எமன் எல்லையில் எமபடரை நீக்கி வெற்றி பெறச் செய்வதே வேதம். ஆசான் அருளால் ஆதம் பாதத்தை தன்னில் அறிந்து தொழுபவர்களே மெய் அறிந்த மேங்குல மக்கள்.

**அறிவு அறி பாடம் - குரு பிரான் அருளமுதம்:**
னெற்றிக்கு னேரே உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரமே உற்ற பொருளான அரும்பொருள். எண்டிசைக்கும் முன்னிற்கும் திருச்சிற்றம்பலப் பொருளாகிய ஜீவனின் அன்பு நம் மீது சாயும் போதே அறன் பதவி பெற முடியும். இறைவன் இருப்பிடமாம் சப்தம் பிறக்கும் இடமான ஆகாயத்தை சுருட்டி மடக்கி திரட்டி தனதிடத்துள் சூலாக அடக்கியுள்ள திருவெனும் அட்சரத்துடன் இரண்டறக் கலந்து வாழும் செயலை அருள்பவரே இறைகுரு.

*ஜீவசகோதரர் சங்கர்:* தூங்காமல் தூங்கி சுகம் பெறும் செயல் மீது நாம் வைக்கும் இச்சையே நம் ஜீவனைக் காத்து அறிவுக் கூர்மையில் ஆக்குகிறது.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 18-10-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஶ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **திருவளரும் திசையில்லா தலத்தின் பாதம்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
குருவருளால் சங்காரம் செய்யப் பெற்ற நரன் மனுவாக மாறி அவர் அருளிய தாரகா மந்திரத்தை ஓதிட நாட்கள் வரும் நாளெல்லாம் தீபவளியே. அவரின் வாசகம் ஆகிய தீர்த்தத்தில் குளிப்பதே கங்கா ஸ்நானம். செவிச் செல்வம் பெற்று அசலைப் பேசும் அறிவுள்ள மக்களே ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள். மதம் மாறாமல் மனம் மாறி பரிசுத்த ஆவியில் பிறந்து மெய் உணர்வு பெற்று நீதி எனும் பொருள் ஆனவனே மனு. எழுதாத எழுத்தாகிய நீதி என்ற பிடரிக் கண்ணே ஐம்புல நுகர்வுக்கும் காரணமாகும்.

*ஜீவசகோதரர் கௌதம்:* அறியாமையை வெட்டி வீழ்த்தும் வாக்கு வல்லபம் கொண்ட பெரியோரே நம்மை அழிவிலிருந்து மீட்டு அழியாமையில் ஆக்குகிறார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்தியவேதம் : மத்தேயு சுவிஷேசம் அதிகாரம்19 : வாக்கியம் 23- 26:** ஐஸ்வர்யமான நம் வயது வீணாகாமல் உள்ளதைப் போதுமாக்கும் பிரம்ம வித்தை செயலை அருளும் வல்லபம் கொண்டவரே குரு. சாத்தியம் இல்லாத ஒன்றை சாத்தியமாகும் வண்ணம் கூறும் வேதத்தின் பரிபாஷை யாவும் குருவின் அருளால்தான் அறிய முடியும்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி பானுமதி:* மனுவை சிவமாக்கி தன்மயமாக ஆக்கும் ஆசானின் திருவாக்கான விபூதியே மூசா நபி கண்ட நெருப்பாகும். இதுவே மரணக் குளிரை மாற்றும் தீபத்தை குறிக்கும் பண்டிகையாக உள்ளது. குருவின் வாக்காகிய தீயே குருதி எனும் இயேசுவின் இரத்தம் ஆகும். அல்லாஹ் எனும் அறிவு வழியில் நடப்பவர்கள் சொர்க்கமும் மற்றவர்கள் நரகமும் செல்வர் என்பது வாழும் காலத்தில் நடப்பதாகும். குருவருளால் மறுபிறப்பு பெற்று வாழும் மெய்யான வாழ்வை மறப்பவர்க்கு மரணமே தீர்ப்பாகும்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் 223 - குருபிரான் அருளமுதம் :**

எம பயத்தை கடந்து வாழ்வதே வாழ்வாகும். அந்தகனாம் காலனின் ஊராகிய எமனூரில் அவனுடைய பஞ்சபூதக் கரங்கள் தீண்டாமல் வாழ்வதே அறிவின் வழி. காலத்தை கடந்தவர்கள் பிறப்பு இன்றியும் மற்றோர் பிறவி சுழலிலும் சிக்குவர். ஜீவனை சிவனாக்கும் வல்லபம் கொண்ட நீதி வாழ்வில் நடப்பவரே நித்தியன்.

*ஜீவசகோதரி சரஸ்வதிசேகர்:* ஆசானின் உயிர் காற்றாகிய நாதமெனும் சஞ்சீவி நம் அறிவாகிய தீபத்தை பிரகாசிக்கச் செய்யும் நாளே தீபவளித் திருநாள்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* மாசறும் தேசிகர் மனுவின் தலையில் ஏற்றும் மாசற்ற அறிவு ஜோதியை தரிசித்தவர்க்கு நாளெல்லாம் தீபவளி திருநாளே. பண்டிகைகளின் அடிநாதம் நரன் மனுவாக மாறுவதற்கே. ஆசான் தனது சொல்லக விளக்கெனும் ஜோதியால் நரனின் அறியாமையை சங்காரம் செய்வதே நரகாசுர வதம் எனும் அசுர சம்ஹாரம். தேசிகர் அருளும் தீர்த்தமாகிய தடாகத்தில் ஆடை நனையாமல் அங்கம் நனைந்து குளிப்பவரே வினை தீர்ந்து பிறவாமை பெறுவர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 23-10-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **சொல்லரிய னால் வேதம் அங்ஙம் ஆறும்...** எனும் பாடலுடன் அவை மலர்ந்தது.



**குருபிரான் அருளமுதம்:**

காராகிய எமனை மிதித்து ஏறும் வல்லபம் பெறுவதை உணர்த்தும் வழிபாடே காரடையான் நோன்பாகும். மாசி மாத கடைசி நாள் இரவு விரதம் துவங்கி பங்குனி மாத முதல் நாள் பகலில் நிறைவு செய்து இறைவனை பிரார்த்திக்கும் இந் நோன்பின் அகமியச் செயலை அறிய, ஆசானை வெறுக்காமல் மனதை வெறுத்து பிரம்ம வித்தை செயலை வைராக்கிய பத்தியத்துடன் பழகித் தேற வேண்டும் என வேதம் கூறுகிறது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 9**

காலமெல்லாம் புறத் தொழுகை புரிந்து, ஏட்டிலுள்ள எழுத்தை வேதமென ஓதிக் கொடுப்பவர்களும் இறுதியில் எமனிடமே சிக்குகின்றனர். இந்த அவலத்தின் காரணத்தை அறிவித்து, ஓதாமலோதும் வேதத்தின் மூலம் அசலான மெய்த் தொழுகையில் பழகச் செய்து ஜீவேசத்தகை வாழ்வில் நம்மை குடியேற்றி வைப்பவரே மெய்க் குருபிரான்.



Copyright © AMNA Trust, Chennai

**அறிவு அறி பாடம்:**
**அழியா வர வாழ்விற்காக சாலை ஆண்டவர்கள் அருளியது - குருபிரான் அருளமுதம்:**

1) அருட்பதியாகிய குருனாதரை தேடி அடைந்ததும் இருள் எனும் அறியாமை ஓடி விடும்.
2) ஆதி பரமகுரு அருளால் தன் எனும் ஜீவகுகையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஜோதியை தரிசித்து நீதி நன் நெறியில் நடப்பதே அறிவு சார்ந்த வாழ்வாகும்.
3) ஒளி மார்பாகிய இருதயத்தை விளங்கச் செய்பவரே இறை குரு.
4) பெரியோர் சொல்லுக்குக் காது கொடுப்பதே ஈகையாகவும், அவர்களின் திருச் செயலுக்கு இணங்கி நடப்பதே இரக்கமாகவும் உள்ளது.
5) உற்ற பொருளாகிய குருபிரானிடம் யதார்த்த உள்ளத்துடன் ஓதிடல் வேண்டும்.
6) தேகம் நான் எனும் அறியாமையுடன் அதை வளர்ப்பதற்கான உணவின் மீதும் உறக்கத்தின் மீதும் இச்சை கொண்டால் அதுவே உயிருக்கு ஆணியாக கேடாக அமையும்.
7) எங்கும் நிறைந்த இறைபொருளாகிய ஏகாட்சரத்தை அறிய வைப்பவரே ஆசான்.
8) உணவு உண்பதிலும், உறங்குவதிலும், மூச்சு துண்டாடும் பாவச் செயலிலும் ஏழைக்கு ஏழையாக இருப்பது நன்மை பயக்கும்.
9) அறிவாகிய தெய்வத்தை தன்னுள் ஐயமின்றி அறிய வேண்டும் என சர்வ வேதங்களும் கூறுகிறது.
10) உயிர் - மெய் - அறிவு மூன்றும் னற்றாளாகிய ஒரு பொருளையே உணர்த்துகிறது.
11) குருபிரான் நாதத்தின் துணை கொண்டு எழுதாத எழுத்தை ஓதாமல் ஓதும் இரகசியமே பிரம்ம வித்தையாகும்.
12) ஔவாகிய ஓரறிவின் தெய்வச் செயல் கைவசமாகியதும் அகலாது ஒழுகிவரல் வேண்டும்.
13) வாசனை கேள்வி இருகண் வாயெவைக்கும் வல்லமை அளிக்கும் அக்கண்ணை கண்டு அகரத்தில் ஆகுவதே அழியாப் பத வாழ்வாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 25-10-2025 ~ சனிக்கிழமை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பரிசுத்த ஆவித் தெய்வம் மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பஞ்சாட் சரமேனி படிந்நகுல தெய்வமதை...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:*
நீதி வடிவாக வரும் குருபிரானே, மனுவின் ஆறாம் அறிவை அறியச் செய்து அசல் இறைவனைக் கண்டு வணங்கச் செய்யும் ஆற்றல் உள்ளவர். அவரே நம் புலன் வழி செல்லும் ஐம்புலனை அறிவாக மாற்றி பேரின்பம் அனுபவிக்கச் செய்கிறார். மக்களின் பிறவிப் பிணி எனும் தாகம் தணிக்கும் தடாகமே ஆதி மார்க்க னீதி அவை.

**கோடாயிதக்கூர்:** கற்பாந்த கோடி நித்திய மகா வளமையான சிரஞ்சீவி வாழ்வுக்கென வந்த மனு அதற்கான துணையைத் தேடிக் கொள்ள வேண்டும். அதைத் தேடாதவனே மரணத்தின் பிடியில் சிக்கி அழிகிறான்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம்: மத்தேயு - அதிகாரம் 19 வாக்கியம் 28,29,30:**

பிறவிப் பிணி தீர்க்கவே சர்வ மதங்களும் வேதங்களும் வந்தன. ஆசான் அருளால் கலிமாப் பொருளை அறிந்து மனதால் வந்த வினை தீர்த்து சிங்காசனத்தில் அமரும் அறம் சார்ந்த வாழ்வே மறுபிறப்பு. ஆதியாம் நம் சொந்த தேகமான ஈஸ்வர சைதன்யத்தில் குடியேறி வாழ்வதே அகங்காரம் அற்ற நிலையாகும். முன்பின் அற்ற முழு முதல் அறிந்த குருவே யாவர்க்கும் முன்னும் பின்னுமாக இருப்பவர்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் வடிவேலன்:* அழி தேகத்திலும் அனித்திய வாழ்விலும் சீரழியும் மனிதன், ஆசானின் சொல்லக விளக்காகிய ஜோதி மூலமே பிரகாச வாழ்வைப் பெறுகிறான். நரன் அழிந்து மனுவாக மாறும் செயலைக் குறிப்பதே தீப வளிப் பண்டிகை. குருவின் அருளால் ஆறாம் அறிவை அறிந்து மும்மலம் எனும் முப்புரம் எரிக்கும் செயலை உணர்த்துவதே கோவில் சிற்பங்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது

## 26-10-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஶ்ரீ. விஜயகுமார்

பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வந்தது நிஜந்தான் ஐயா...** எனும் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
மனம் எனும் ஆறாம் அறிவைப் பெற்று வந்த மனுவே நெருப்பாறு மயிர்ப்பாலம் கடந்து இறைவனை அறிவதற்கான தகுதி உள்ளவன். சைவம் கூறும் அன்பே சிவம் என்பதே அழிவற்ற பொருளாகும். மேல் நோக்கமாக மனம் எனும் கால் கொண்டு நடக்கும் நினைவெனும் பாதையே பெரியோர்கள் வகுத்த ராஜபாட்டை ஆகும். திசையற்ற சூரியன் விடியும் திசையாகிய கிழக்கு நம் முகமேயாகும். அறியாமை அகன்று அறிவானது துலங்கி சாலை வாழ்வில் குடியேறி தன்னுலகம் விடியும் நாளே லைலத்துல் கதிர் ரா, எட்டாம் நாள் ரா, சிவன் ரா என்பதாகும். மூல மந்திரமாக அவரவரிடம் உள்ள மெய்யை நிரூபித்து முத்தி பாலிப்பு அருளும் ஆண்மை பொருந்திய குரு ஆணே சாலை ஆண்டவர்கள். சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நா பழக்கம் வைத்ததொரு கல்வி மனப்பழக்கம், ஆதலால் மனதை மேல் நோக்கமாக செலுத்துவதே நன்மை தரும். வள்ளுவர் அருளிய எழு சீர் கொண்ட திருக்கொரலே அமானிதத்தை அறியச் செய்யும் அருட்கொடையாகும். சாந்தி எனும் சலாமத்தை அடைவதே சன்மார்க்க வழியாகும். நீதி எனும் பொருள் ஆன இவ்வழியே மெய்வழி.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* இஸ்லாம் எனும் ஜீவனின் ரகசியமான கலிமாப் பொருளை கடம் திடத்துடன் இருக்கும் போதே குருவருளால் அறிவது மனுவின் கட்டாய கடமையாகும். ஏழு நரகம் கடந்து எட்டாம் நிலையில் இருக்கும் சொர்க்கத்தை எட்டுவதே இறைவனின் சாயலாகிய மனுவின் ஜென்ம சாபல்யம். பேரொளிப் பிழம்பாகிய சத்தினி ஹபீப் எனும் இறை வஸ்துவை மெய் குருவின் தயவால் அறிந்து அதனுடன் இரண்டறக் கலப்பதே முக்தி.

*ஜீவசகோதரி அபிராமி ராஜமகேஷ்:* ஆசான் நம் மீது வைக்கும் அசலான அன்பே அழியாமைக்கு நம்மை அழைத்துச் செல்லும். மெய்மைக்கு முதலிடம் தருவதே அழியா வாழ்விற்கான வழி. பற்றற்றான் பற்றைப் பற்றுவதே பிறவாமை பெறுவதற்கான வழியாகும்.

*ஜீவசகோதரி அஞ்ஞனா:* அக உலகு விடியச் செய்து நம் வினை தீர்க்கும் விநாயகரே ஞான சூரியனாக வரும் மெய்க் குருபிரான். அடி முடி நடுவாக இருக்கும் மெய்யை அறியச் செய்வதே ஆதி மார்க்க னீதி அவையின் அடி நாதம்.

*ஜீவசகோதரி கவிதாவெங்கட்:* பற்றற்ற குருவின் திருவடி பற்றியே பரமபத வாசலுள் நுழைய முடியும். அழிஅவா மனதை விட்டு ஐவழி விளைவுக்கு அப்பால் உள்ள மெய்வழியை அடைய செய்வழி காட்டி உய்வழி கூட்டும் உத்தமரின் நோக்கமே துணையாகும்.

*ஜீவசகோதரர் குபேர்:* ஆசான் அருளால், நான் எனும் சிற்றணு வடிவாம் நித்திய மெய்ப்பொருளான அகர வடிவை அறிவதே தன்னை அறிதலாகும். மங்காத கவசத் திருநீற்றை நம் நெற்றியில் பூசி மூல மந்திரத்தை தரிசிக்கச் செய்யும் செயல் உள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் ராஜமகேஷ்:* மெய்யை மெய்யாக்கும் செயல் உள்ள இடமே ஆதி மார்க்க நீதி அவையின் சரவண நந்தவனம். தன்னறிவில் சாயாமல் குருவின் கை ஆயுதமாக இருப்பதே இக பர சம்பத்துடன் வாழ்வதற்கான வழியாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 30-10-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **அப்பன் என்னுடை அன்னை தேசிகன்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
அச்சோ எனும் அகரப் பொருளே அறிவாகும். மனம் பூரிக்காமல் அறிவு பூரித்து நிர்குணத்தில் ஆகும் போதே பேரின்பம் கை வரவாகும்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் 9 : குருபிரான் அருளமுதம்:**
திருக்கொரல் எனும் எழு சீர் அமானிதம் கூறும் வாலறிவன் னற்றாளைத் தொழுவதே கற்றதின் பயனாகவும், திருக்குரான் கூறும் ஆதம் பாதத்தை தன்னிலறிந்து தொழுவதுமே கடமையுமாகும். ஆசான் அருளும் புண்ணியத்தின் உருவை அறிந்து வேத வழியில் வாழ்வதே குரு காணிக்கையாகும்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:**
ஆசானின் அருள்வழி பற்றி அறவழியாம் ஜீவவாழ்வில் திடம்பட ஏறி அறவாழி அந்தணன் தாள் சேர்ந்து அமரனாகி பெறுவதே அறன் பதவி. சர்வ உலகினருக்கும் அன்பெனும் விசேஷமே அறன் பதவிக்கான முதலாகும். நித்திய தேகமான பொன்மேனி மின் வீசும் புகழுடம்பின் பாத்திரமே அனித்திய உடல். நினைவுட் பதியும் னாத மின்னுடலே ஆகாயத்தின் அம்சமாக, அவரவரின் சொந்த தேகமான மோட்ச சாம்ராஜ்யமாகும். மனிதனைப் பிரகாசமாக்கும் மெய்யான ஒளியை திருவெனும் அட்சரத்துள் புள்ளி வடிவாக தேகத்தினுள் வைத்திருப்பது இறைவனின் வல்லமையாகும். மெய்யை மெய்யாக அறிந்து உணர்ந்து உள்ளுடம்புள் அடங்கியவர்களே அடக்கம் மடக்கிப் பிடிக்கத் தெரிந்து பொற்பதவிக்கு ஆனவர். உடலின் ஆதாரமான நாலு தேக ரகசியத்தை மெய்க்குருவின் சொல் கேட்டு நடந்து மெய்ம்மண ஞானத்தை பெற்றவரே ஜாதி நிஷ்டையில் நிலைத்து னிற்பர்.

*ஜீவசகோதரர் சங்கர் :* மெய்க் குருவின் ஆலவாய்ச் சூலில் மறுபிறப்பு பெற்ற மனுவே மெய்வழி எனும் அறிவு மேடு கண்டவன் ஆகிறான். குருவின் நோக்கறிந்த மனுவே அறிவின் வழி னின்று இறைவனின் நேசன் ஆகிறான்.

ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*ஸம்ஸார சமுத்திரத்தைக் கடப்பிக்கும் முக்கிய மந்நிரமும், பிரம்மாதி தேவர்களாலும் முனிவராலும் பூஜிக்கப்பெற்ற சித்த மந்நிரமும், தரித்திரிய துக்கத்தையும், பவரோகத்தையும் இல்லாமல் ஆக்கும் வல்லப மந்நிரமுமாகிய மாரணம் என்ற மகாபயத்தைக் கெடுக்கும் குருராஜ மந்நிரத்தை னமஸ்கரிக்கின்றேன்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**12-10-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **எட்டிரண்டான சஞ்சீவி இதை யெட்டாத வனை எட்டி மிதிக்கும் சஞ்சீவி** என்ற பாடலுடன் அவை மலர்ந்ததும், குருபிரான் வழி காட்டுதலுடன் **செயலுடை சமரசம்** பாடல் இரண்டு வித ராகத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**26-10-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **திருவளர் திருவே...** என்ற குருமணிமாலை ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்ததும், குருபிரான் அருளிய பிரகாரம் **பொன்னரங்க கொம்மி** பாடல் இரண்டு வித ராகத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*எழுகோடி மகாமந்நிரங்ஙளும் சித்த மயக்கத்திற்குக் காரணமானவை. குருவென்னும் இரண்டெழுத்துள்ள மந்நிரமொன்றே சர்வத்திற்கும் மேலானதாம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 2025 - அக்டோபர் மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 05-10-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

நமது குருபிரான் **சாலை ரவி அப்பா** அவர்களின் அவதாரத் திருநாள் மற்றும் ஆதி மார்க்க னீதி அவையின் செயலாளர் மணிவண்ணன் அவர்களின் பேரக் குழந்தைகள் **சித்தார்த் மற்றும் நிரஞ்ஞன்** அவர்களின் பிறந்தநாள் விழா சென்னையில் நடைபெற்றது.





## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **03-12-2025 / சென்னை புதன்கிழமை** | நமது குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திருமுன்பாக திருக் கார்த்திகை தீபத் திருவிழா சென்னையில் நடைபெற இருக்கிறது. |



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 அக்டோபர் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 67**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கு ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 52 – Month: November 2025*